පාර්ලිමේන්තු ප්‍රකාශන මලා අංක : 95

ආයතනයේ නම : කොළඹ මහා නගර සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 95

நிறுவனத்தின் பெயர் - கொழும்பு மாநகர சபை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Parlimentary Series No: 95**

**Name of the Institution : Colombo Municipal Council**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No119(4)**

# அரச கணக்குக்குழு- பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர்- 95

## கொழும்பு மாநகர சபை

<table>
<tr><th>தொ.இல.</th><th>குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்</th><th>தற்போதைய நிலைமை மற்றும் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்</th></tr>
<tr><td>01</td><td>கணக்காய்வு மற்றும் முகாமைத்துலக்குழுக் கூட்டம்</td><td>கொழும்பு மாமநகர சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2023,2024, 2025 ஆண்டுகளில் நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டங்கள் பின்வருமாறு.<br><br>2023 ஆண்டு
<table>
<tr><th>குழு</th><th>நடத்தப்பட்ட திகதி</th></tr>
<tr><td>I வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2023.05.09</td></tr>
<tr><td>II வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2023.06.27</td></tr>
<tr><td>III வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2023.09.26</td></tr>
<tr><td>IV வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2023.12.31</td></tr>
</table>
2024 ஆண்டு
<table>
<tr><th>குழு</th><th>நடத்தப்பட்ட திகதி</th></tr>
<tr><td>I வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2024.03.28</td></tr>
<tr><td>II வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2024.06.20</td></tr>
<tr><td>III வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2024.10.30</td></tr>
<tr><td>IV வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2025.01.03</td></tr>
</table>
2025 ஆண்டு
<table>
<tr><th>குழு</th><th>நடத்தப்பட்ட திகதி</th></tr>
<tr><td>I வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2025.03.25</td></tr>
<tr><td>II வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு</td><td>2025.07.30</td></tr>
</table></td></tr>
<tr><td>02</td><td>செயல்நடவடிக்கைத் திட்டம்</td><td><ul><li>2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.</li><li>2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அங்கீகாரம் பெறப்படவில்லை.</li></ul></td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>

- 2022,2023,2024 மற்றும் 2025 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது

</td></tr>
<tr><td>03</td><td>கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கும் முன்னேற்றம்</td><td>

2022, 2023,2024, 2025 ஆண்டுகளில் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல் தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு.

<table>
<tr><th>ஆண்டு</th><th>ஆண்டினுள் கிடைத்த கணக்காய்வு ஐயவினாக்கள் எண்ணிக்கை</th><th>ஆண்டினுள் பதிலளித்த கணக்காய்வு ஐயவினாக்கள் எண்ணிக்கை</th><th>இன்றளவில் பதிலளிக்க எஞ்சி இருக்கும் கணக்காய்வு ஐயவினாக்கள் எண்ணிக்கை</th></tr>
<tr><td>2022</td><td>37</td><td>22</td><td>-</td></tr>
<tr><td>2023</td><td>28</td><td>21</td><td>-</td></tr>
<tr><td>2024</td><td>19</td><td>8</td><td>06</td></tr>
<tr><td>2025.08.11 திகதிக்கு</td><td>13</td><td>இன்றளவில் கணக்காய்வு ஐயவினா 01க்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.</td><td>12</td></tr>
</table>

</td></tr>
<tr><td>04</td><td>நிலுவை வருமானம்</td><td>

- 2022 டிசம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி ரூபா பில்லியன் 4,316.8 நிலுவைத் தொகையில் 2023 ஆண்டினுள் ரூபா 934,040,879.49 நிலுவைத் தொகை வரியாக அறவிடப்பட்டுள்ளது. 2024.12.31 திகதியாகும் போது அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 1,134,906,711.51. (இணைப்பு 1)
- ரூபா 100,000/-க்கும் கூடிய நிலுவை வரிப்பணம் செலுத்தாத சொத்துக்கள் 198 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன் அச்சொத்துக்களுள் 14 சொத்துக்களில் அறவிட்ட நிலுவை ரூபா 72,747,231.79 ஆகும். (இணைப்பு 2)

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | • நிலுவைத் தொகை காண்பிக்கப்பட்டாலும் உண்மையிலேயே அவ்வாறு இல்லாத சொத்துக்கள் தொடர்பில் சொத்து தொகை மதிப்பீடு அறிக்கை 2024.06.30 திகதி நிலுவையை அடிப்படையாகக் கொண்டு, ரூபா 100,000/-க்கும் கூடுதலாக நிலுவை சொத்துக்கள் 6816 வருமான பரிசோதகர்களுக்கும் ரூபா 100,000/-க்கும் குறைவான நிலுவையுள்ள 73164 சொத்துக்கள் நிலுவை வரி சேகரிக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டன. அந்த கணக்கெடுப்பின் மூலம் கண்டுபிடிக்க முடியாத சொத்து கணக்கெடுப்பு அறிக்கை (இணைப்பு 3)<br>• நிலுவை சொத்துக்களில் இருந்து பணம் அறவிடுவதற்கு வருமான பரிசோதகர்களுக்கு கொடுக்கப்பட்ட கோரிக்கை அறிவித்தல்கள் 5889 இல் 4433 விநியோகிக்கப்பட்டு, ரூபா மில்லியன் 352 அறவிடப்பட்டுள்ளது. ரூபா 100,000/-க்கும் குறைவான பெறுமதியுள்ள சுமார் 66,000 காணப்படுவதுடன் இந்த சொத்துக்களிலிருந்து நிலுவையில் உள்ள வரிகளை வசூலிக்க பணியமர்த்தப்பட்ட 11 உத்தியோகத்தர்கள் போர்கள் எந்தவகையிலும் போதுமானதாக இல்லை. இதுவரை, 21332 கோரிக்கை அறிவிப்புகள் விநியோகிக்கப்பட்டு ரூபா 99 மில்லியன் அறவிடப்பட்டுள்ளன. (இணைப்பு 4) |
| 05 | 2022 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 4316.8 வான நிலுவை வரிப்பணம் வரி வருவாயினுள் ரூபா மில்லியன் 10 க்கு கூடுதலான சொத்துக்கள் 24 இல் வரிப்பணம் அறவிடப்படாத நிலையில் தொடர்ச்சியாக காணப்படுதல். | ரூபா மில்லியன் 10 க்கு கூடுதலான சொத்துக்களின் தற்கால தகவல்கள் இணைப்பு 5 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 06 | 2003 முதல் 2016 வரையிலான காலப்பகுதியில் நிலுவைத் தொகை செலுத்த வேண்டிய 193 சொத்துக்களுக்கு தொடர்புடைய ரூபா 214,628,001 | 2003 முதல் 2016 வரை நிலுவை வரிப்பணம் செலுத்த இருந்த சொத்துக்கள் தொடர்பான தற்கால தகவல்கள் இணைப்பு 2 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

163

| | | |
|---|---|---|
| | வரிப்பணம் நிலுவைத் தொகை பற்றிய தகவல்களைக் கண்டுபிடிக்க முடியாததால், அந்த சொத்துக்களின் உரிமையாளர்கள் மற்றும் கடைசியாக உரிமைக் கோரப்பட்ட உறுதிப்பத்திரங்கள் மற்றும் திட்டவரைபடங்கள், பற்றிய தகவல்களை கண்டிப்பிடிக்க முடியாதுப்போன காரணத்தால் 2020.12.31 திகதி நிலவரப்படியும், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 259 இன் படி விற்பனைச் சான்றிதழ்களை எழுத நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| 07 | தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் பார்க்கிங் மீட்டர்களை (Parking meters) பொருத்துவதற்கு ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும், 2016 முதல் வாடகை செலுத்தாததால் 2021.04.07 திகதி சம்பந்தப்பட்ட நிறுவனத்துடனான ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்ட போதிலும், 2021.12.31 நிலவரப்படி சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து நிலுவையில் உள்ள ரூபா மில்லியன் 101.77 வாடகை வருமானத்தை வசூலிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நிலுவைத் தொகையான வாடகையை வசூலிக்க நீதிமன்ற நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன, மேலும் நடுவர்த்தீர்ப்பு வழக்கு 2025.10.30 அன்று மாலை 4.00 மணிக்கு நடுவர்த்தீர்ப்பு நிலையத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.<br>வாகன நிறுத்துமிட முகாமைத்துவ டிஜிட்டல் மயமாக்குதல் தொடர்பான செயற்றிட்டமான (Digital Parking Management system) இற்கு கொழும்பு மாநகர சபையினால் Clean Sri Lanka திட்டத்தின் கீழ் ரூபா 40 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில், செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருவதுடன் ஆனால் பொது நிருவாகம் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சு மூலம் இந்தத் திட்டத்தைத் தயாரித்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 08 | கருவாத்தோட்டம், பார்ன்ஸ் பிளேஸ், வரிப்பணம் இல. 43 இல் அமைந்துள்ள 154.43 பேர்ச்சர்ஸ் அளவிலான சொத்து, ஒரு வருடத்திற்குள் உரிமையாளர் | இந்த சொத்து, வரிப்பணம் வரி நிலுவைத் தொகையை செலுத்தாததால், 07.10.1974 அன்று கொழும்பு மாநகர சபையால் கையகப்படுத்தப்பட்டு, பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த சொத்து தொடர்பான வழக்குகள் |

| | | |
|---|---|---|
| | வரிப்பணத்தை செலுத்தாததால், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 263 இன் படி, 1974.10.07 திகதி கொழும்பு நிலப் பதிவு அலுவலகத்தில் கொள்முதல் சான்றிதழ் பதிவுசெய்யப்பட்டு சொத்தின் சட்டப்பூர்வமான உரிமையை சபைக்கு வழங்கப்படவில்லை. அன்று பதிவு செய்யப்பட்டிருந்தாலும், சொத்தின் சட்டப்பூர்வ உரிமை சபைக்கு மாற்றப்பட்ட போதிலும் 2021.12.31 திகதி நிலவரப்படி, நிலத்தின் அனுபவிப்பை நகர சபைக்கு கையகப்படுத்திக் கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | முதன்மை நீதிமன்றங்கள் முதல் உயர் நீதிமன்றங்கள் வரை தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வந்தன. 2014 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முடிவடைந்த பின்னர், 23.08.2016 அன்று, இந்த சொத்தை மீண்டும் பெறுவதற்காக, 1979 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க அரசாங்க நிலங்கள் (உடைமை மீட்பு) சட்டத்தின் கீழ், அந்த இடத்தின் குடியிருப்பாளர்களுக்கு வெளியேற்ற அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. அந்த அறிவிப்புகளுக்கு எதிராக, அந்த இடத்தின் அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் CA(Write) 316/2016 கொண்ட வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு, சபைக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்ட பிறகு, கொழும்பு மாநகர சபை, சொத்தை மீண்டும் பெறுவ்தற்காக 63194/5/16 கொண்ட வழக்கைத் தாக்கல் செய்தது. இந்த வழக்கு தற்போது மூடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் (தற்போது தங்கள் வசம் உள்ளவர்கள்) மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் இல. CA(Write)316/2016. தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் இலக்கம் CA/Appeal/56/2017 வழக்கு ஐ தாக்கல் செய்துள்ளனர், இந்த வழக்கு 01.04.2025 அன்று விசாரிக்கப்பட உள்ளது. |
| 09 | காணிப் பதிவேட்டின்படி 168 காணிகள் மாநகர சபைக்குச் சொந்தமானவை என்று கூறப்பட்டிருந்தாலும், அந்த நிலங்களின் உரிமை எவ்வாறு மாநகர சபைக்கு மாற்றப்பட்டது அல்லது அவை மாநகர சபைக்குச் சொந்தமானவை என்பதை உறுதிப்படுத்த தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. 06 காணிகளில் அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்கள் இருப்பது | நகர சபைக்கு 168 நிலங்களை சொந்தமாகக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டாலும், ஆவணங்களை ஆய்வு செய்யும் போது, சபையிடம் சட்டப்பூர்வ ஆவணங்கள் உள்ள 132 நிலங்களை அளவீடு செய்து சொத்துப் பதிவேட்டைப் புதுப்பிப்பதற்கான கால சட்டகம் 2025.03.03 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.<br>அதன்படி, நில அளவீட்டுப் பணியின் முன்னேற்றம் பின்வருமாறு. |

| | | |
|---|---|---|
| | தெரியவந்துள்ள போதிலும், 31.12.2021 வரை இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மொத்த நிலங்களின் எண்ணிக்கை - 132<br>**நில அளவையாளர் திணைக்களம்**<br>☐ ஒப்படைக்கப்பட வேண்டிய நிலங்களின் எண்ணிக்கை - 50<br>☐ ஒப்படைக்கப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 41<br>☐ அளவிடப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 18<br>**அங்கீகாரம்பெற்ற நில அளவையாளர் பிரிவு**<br>☐ ஒப்படைக்கப்பட வேண்டிய நிலங்களின் எண்ணிக்கை - 32<br>☐ ஒப்படைக்கப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 26<br>☐ அளவிடப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 08<br>**2025.07.02 (02) அன்று பதிவுசெய்யப்பட்ட நில அளவை நிறுவனங்கள்**<br>1. M /S Saliya Wikramasinghe & Surveyors (Pvt) Ltd<br>2. M /S Global GIS (Pvt) Ltd<br>☐ ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ள நிலங்களின் எண்ணிக்கை - 50<br>☐ ஒப்படைக்கப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 39 – (18 + 21)<br>☐ அளவிடப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 0<br><br>☐ மறு ஆய்வு செய்யப்படாத நிலங்களின் எண்ணிக்கை - 11<br>☐ மதிப்பிடப்பட்ட நிலங்களின் எண்ணிக்கை - 34<br>☐ இல் எடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை - 27<br>☐பொறுப்பேற்பதற்காக பிரதேச செயலாளர்களிடம் செய்யப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை - 16 |
| 10 | சபைக்குச் சொந்தமான மோதர எலி ஹவுஸ் (Eli | கொழும்பு 15, அலுத் மாவத்தை வீதி, இல. 531 இல் அமைந்துள்ள |

160

| | | |
|---|---|---|
| | House) காணியில் 50 பேர்ச்சஸ் 1992 ஜுலையில் ஒரு நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது, மேலும் அந்த காணியின் மீதமுள்ள 60 பேர்ச்சஸ் அந்த நிறுவனத்தால் அனுமதியின்றி அதன் சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது, மேலும் அத்தகைய அங்கீகரிக்கப்படாத பயன்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான சுமார் 50 பேர்ச்சஸ் நிலம், 1992.07.30 திகதியிட்ட பொதுச் சபைத் தீர்மானம் இல. 331 இன் மூலம், 1992.07.30 முதல் 30 ஆண்டுகளுக்கு சமதா சரண அறக்கட்டளைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகை காலம் 2022.07.29 அன்று முடிவடையும்.<br>இந்த 50 பேர்ச்சஸுக்கு மேலதிகமாக, மேற்படி நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் 40 பேர்ச்சஸ் மற்றும் அனுமதியின்றி மேலும் 50 பேர்ச்சஸ் கொண்ட 90 பேர்ச்சஸ் நிலத்தை வரி செலுத்தாமல் அனுபவித்து வருவதாகவும், அதற்கான வரிகள் மற்றும் நிலுவைத் தொகையை இதுவரை சபையினால் வசூலிக்க முடியவில்லை என்பதும் 2022 முதல் பரிமாறப்பட்ட கடிதங்கள் மற்றும் இது தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் தெரியவந்துள்ளது.<br>மாநகர ஆணையாளர் தலைமையில் 03.05.2025 அன்று நடைபெற்ற நிலுவைத் தொகை வசூல் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது. ஒப்பந்தம் செய்யப்படாத 50 பெர்ச்சஸ் தொடர்பான நிலுவைத் தொகையைத் தீர்ப்பது மற்றும் ஒப்பந்தம் செய்யப்படாத 40 பெர்ச்சஸ் தொடர்பான வரிக் கட்டணங்களை செலுத்தும் முறையின் அடிப்படையில் 50 அங்கீகரிக்கப்படாத பெர்ச்சஸ் வழங்குவது குறித்து பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டது.<br><br>2025.04.30 வரை ஒப்பந்தம் செய்யப்பட்ட 50 பெர்ச்சஸ்களுக்கான |

(159)

| | | |
|---|---|---|
| | | நிலுவைத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தம் செய்யப்படாத நிலத்தின் பரப்பளவிற்கு மறுமதிப்பீடு வழங்க சமதா சரண நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது, அது மதிப்பீட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>2025.02.25 அன்று நடைபெற்ற பொதுக் கணக்குகள் குழுவில் ஒப்பந்தம் செய்யப்படாத நிலத்தின் பரப்பளவிற்கு அபராதம் விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி கலந்துரையாடலின்படி, 2025.07.30 திகதியிட்ட கடிதம் இல. MT/RV/MIC/LEA/28/2025/14 மூலம் பின்வரும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது.<br><br>1. பிரதி மாநகர பொருளாளர் (வருமானம்)<br>(தலைவர் திரு. இ.எம்.என்.ஆர். பண்டார)<br>2. சட்ட அதிகாரி - உறுப்பினர் - திருமதி. டி.கே.டி. சில்வா<br>3. மதிப்பீட்டு பரிசோதகர் - உறுப்பினர் - திருமதி. ரத்னா ரணசிங்க<br>4. பிரதிப் பணிப்பாளர் (காணி மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு) - உறுப்பினர் - (திரு. கே.ஏ.என்.பி. நாணயக்கார)<br>அதன்படி, மேற்படி குழுவின் அறிக்கையைப் பெற்ற பிறகு, இந்தச் சொத்து தொடர்பாக முடிவெடுக்குமாறு சபைக்குத் தெரிவிக்கப்பட உள்ளது. |
| 11 | கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான கொழும்பு 08, அல்விடிகல மாவத்தையில் பொரளை மயானபூமி மேற்பார்வையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் | கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான, பொரளை மயான மேற்பார்வையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள பொரளை மயானத்திற்கு எதிரே அமைந்துள்ள காணியை கையகப்படுத்துவதற்குத் |

| | | |
|---|---|---|
| | அமைந்துள்ள காணியில், இலக்கம் 02 கொண்ட காணித் திட்டத்தின் 48 ஆம் இலக்க காணியில் அமைந்துள்ள சுமார் 11 பேர்ச்சஸ் நிலத்தில் 6000 சதுர அடி பரப்பளவு கொண்ட இரண்டு மாடிக் கட்டிடங்கள் சட்டவிரோதமாக நிர்மாணித்தல் மற்றும் அந்தக் கட்டிடத்தில் அனுமதிப்பத்திரங்கள் பெறாது இறுதிச் சடங்கு சேவை நடாத்திச் செல்லப்படுதல். | தேவையான தகவல்கள் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திடம் இருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் அந்த அறிவுறுத்தல்கள் கிடைத்த பிறகு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று තිපුලේ/1/104/101 மற்றும் 2025.06.09, 2025.07.17 திகதியிட்ட கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, இந்தக் காணி கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமானது என்பதை உறுதிப்படுத்த சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின்படி முடியும் என திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரின் கடித இல. තිපුලේ1/104/101 மற்றும் 2025.08.20 திகதியிட்ட கடிதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இணைப்பு 6)<br>அங்கீகரிக்கப்படாத கட்டுமானம் தொடர்பில் கொழும்ப மாநகர சபையினால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு எண். 10715/5/24 இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், 2025.09.09 அன்று நடைபெற்ற விசாரணையின் போது அங்கீகரிக்கப்படாத கட்டுமானத்தை இடிக்க நீதிமன்றம் ஒருதலைப்பட்சமான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதற்கு மேலதிகமாக 2025.09.09 திகதியிட்ட உத்தரவின் சான்றளிக்கப்பட்ட பிரதியொன்று 2025.09.11 திகதியிட்ட ஒரு மனு மூலம் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 7) |
| 12 | இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையின் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பட்டியலின்படி, கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்ட 378 ஹோட்டல்கள், தங்கும் | இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை 2023 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் தங்குமிட நிறுவனங்களின் பட்டியலை சமர்ப்பித்து வந்தாலும், 2024 ஆம் ஆண்டு முதல் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் விவரங்கள் |

| | | |
|---|---|---|
| | விடுதிகள் மற்றும் உணவகங்கள் இருந்தன, ஆனால் அவற்றில் 93 மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன, மேலும் அவற்றில் 18 நிறுவனங்களிடமிருந்து உரிமக் கட்டணங்களை அறவிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, மேலும் மீதமுள்ள 275 நிறுவனங்கள் செயல்படுகின்றனவா அல்லது செயல்படவில்லையா என்பதை உறுதிப்படுத்த அவற்றைச் சரிபார்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | முன்பு போலவே சமர்ப்பிக்கப்படுவதில்லை என்றும், அந்தத் தகவலைப் பெற அவர்களின் வலைத்தளத்தை அணுக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, 190 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, பட்டியலிடப்பட்டுள்ளன, மேலும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின்படி கட்டணம் வசூலிக்கப்படும் என்பதை தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| 13 | விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்துவது தொடர்பான இல.1713/10 மற்றும் 2011 ஜூலை 05, திகதி கொண்ட துணைச் விதிச் சட்டத்தின் பிரிவு 9 இன் படி, தொடர்புடைய அளவுகோலுக்கு இணங்காததால், விளம்பரப் பலகைகளுக்கான விண்ணப்பங்களை 04 குழு மூலம் நிராகரித்திருந்தாலும், அவை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அங்கீகாரம் இல்லாமல் காட்சிப்படுத்தப்பட்டன. | மேலே குறிப்பிடப்பட்ட செலுத்தப்படாத விளம்பரப் பலகைகள் ரூபா 11,850,843.07 வருமானத்தை ஈட்டித் தந்தன, மேலும் பணம் செலுத்தத் தவறிய விளம்பரப் பலகைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், நகர திட்டமிடல் பிரிவின் தொழில்நுட்ப அதிகாரிகள் அந்தப் பகுதிகளில் காட்டப்படும் விளம்பரப் பலகைகளை தொடர்ந்து கள ஆய்வு செய்து, கட்டணம் செலுத்தப்படாத விளம்பரப் பலகைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கின்றனர்.<br><br>2024 முதல், அங்கீகரிக்கப்படாத விளம்பரப் பலகைகளை அகற்ற மாநகர வேலைத்தளத்தின் கீழ் ஒரு தனி குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் அந்தக் குழு நகரில் காட்டப்படும் அங்கீகரிக்கப்படாத விளம்பரப் பலகைகளை அகற்றி வருகிறது.<br><br>இங்கே கூறப்பட்டுள்ளபடி, 2023 ஆம் ஆண்டிற்கான விளம்பரப் பலகை வருமானம் ரூபா 87,379,967 மற்றும் முந்தைய ஆண்டிற்கான வருமானம் |

| | | |
|---|---|---|
| | | ரூபா. 42,699,478 ஆகும். இது 2022 ஆம் ஆண்டை விட 104 சதவீதம் அதிகமாகும். சட்டப்பூர்வமாக வசூலிக்கக்கூடிய கட்டணங்களை வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் ஒரு வருடத்தில் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டது. சட்டப்பூர்வமாக வசூலிக்கக்கூடிய கட்டணங்களை வசூலிக்கும் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் விளம்பரப் பலகை வருமானம் ரூ. 90,024,671.64 ஆக இருந்தது, மேலும் செப்டம்பர் 2025 இல், வருமானம் ஆண்டுதோறும் ரூ. 126,676,785.14 ஆக அதிகரித்தது.<br><br>கடந்த ஆண்டுகளில், விளம்பரப் பலகைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ரூபா 25 மில்லியனுக்கும் குறைவாக இருந்தது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால், அந்த வருமானத்தை படிப்படியாக அதிகரிக்க முடிந்தது. நகரத்தில் காட்டப்படும் விளம்பரங்களுக்கு தொடர்புடைய வரிகளை செலுத்த வேண்டும் மற்றும் அனுமதி பெற வேண்டும் என்பது பொதுமக்களுக்குத் தெரியாது, மேலும் இது குறித்து செய்தித்தாள் விளம்பரங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், நகர திட்டமிடல் பிரிவின் அதிகாரிகள் வரி செலுத்தாமல் விளம்பரப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகைகளை அடையாளம் காணவும், தொடர்புடைய ஒப்புதல்களைப் பெற கடிதங்கள் மூலம் அந்த வளாகங்களுக்குத் தெரிவிக்கவும் தொடர்ந்து கள ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட போதிலும் ஒப்புதலுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத விளம்பரப் பலகைகள் மாநகர வேலைத்தளத்துடன் இணைக்கப்பட்ட குழுவால் அகற்றப்படுகின்றன.<br><br>மேலும், 2024 முதல், விளம்பர நிறுவனங்கள் கொழும்பு நகர சபையில் |

155

| | | |
|---|---|---|
| | | பதிவு செய்யப்பட்டன. இது நகரத்தில் விளம்பரப் பலகைகளின் விளம்பரங்களை நெறிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. கொழும்பில் விளம்பரப் பலகைகளை வைப்பது, அந்த பதிவு செய்யப்பட்ட . முகவர் நிலையங்கள் மூலம் பெறப்படும் விளம்பர விண்ணப்பங்களுக்கு மட்டுமே அங்கீகரிக்கப்படும்.<br><br>அந்த அனைத்து பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களும் ஒரு வட்ஸ்அப் குழுவில் சேர்க்கப்படும், மேலும் கள ஆய்வுகளின் போது அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்ட அங்கீகரிக்கப்படாத விளம்பரப் பலகைகள் பற்றிய தகவல்கள் அந்தக் குழுவிற்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்படும், மேலும் இணங்காத விளம்பரப் பலகைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட விளம்பரப் பலகைகள் மற்றும் கடிதங்கள் அனுப்பப்பட்ட விளம்பரப் பலகைகளுக்கான பதிவுகள் பராமரிக்கப்படுகின்றன, மேலும் ஒவ்வொரு ஆண்டும் இறுதியில், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட விளம்பரப் பலகைகளுக்கு புத்தாண்டுக்குத் தேவையான கட்டணங்களைச் செலுத்துமாறு பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. |
| 14 | கொழும்பு பெருநகரக் கழிவுநீர் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் ரூ. 481.62 மில்லியன் செலவில் கட்டப்பட்டு 30.11.2021 அன்று கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்ட கொம்பனித் தெரு கழிவுநீர் பம்ப் நிலையம் செயலிழந்த நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | 2025 பெப்ரவரி 15 திகதி முதல் இந்த கழிவுநீர் பம்ப் நிலையம் செயல்படும் நிலையில் உள்ளது. |

| | | |
|---|---|---|
| 15 | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வசதியின் கீழ் தொடங்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2023 ஜூன் 30 திகதி அன்று முடிவடைய திட்டமிடப்பட்டிருந்த நிலையில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. | வெள்ளவத்தை பகுதியில் உள்ள கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான ஒரு மைதானம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பொருத்தமான இடமாக அடையாளம் காணப்பட்டது, ஆனால் பொதுமக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக, மற்றொரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுப்பது குறித்து பல விவாதங்கள் நடந்து வந்தன. இதற்கிடையில், ஆசிய அபீவருத்தி வங்கி கடன் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டதால், மேலும் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. |
| 16 | பெரும் கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவத் திட்டத்தின் முக்கிய அங்கமாகும். நிறுவன மேம்பாட்டு ஆலோசனை நிறுவனத்தின் கீழ், கொழும்பு மாநகர சபைக்கான செலவுகளை அறவிடுவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி, கொழும்பு மாநகர சபைக்கு மாதாந்தம் பெறப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்றாலும் கூட அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கொழும்பு மாநகர சபை செலுத்த வேண்டிய தொகையில் ஒரு பகுதியை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செலுத்தியுள்ளதுடன், ஒப்பந்தத்தின்படி மீதமுள்ள தொகையை செலுத்த ஒப்புக்கொண்டுள்ளது. |
| 17 | கொழும்ப மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு | தீயணைப்புப் பிரிவில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் இயந்திர தீயணைப்பு வீரர்களை பணியமர்த்தல் மற்றும் பதவி உயர்வு செய்வதற்கான அங்கீகாரங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 20 மாடித்தளங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்களில் தீ விபத்து ஏற்பட்டால், தீயணைப்பு மற்றும் மீட்புக்கான கூட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். |
| 18 | உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னர் | கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 2023.03.19 |

153

| | | |
|---|---|---|
| | கொழும்பு மாநகர சபையின் மாநகர முதல்வர் உத்தியோகபூர்வ இல்லமும் தொடர்புடைய வாகனங்களும் மாநகர சபைக்குத் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பது. | திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கௌரவ முன்னாள் மாநகர முதல்வர் மூலம் மேல் மாகாண கௌரவ ஆளுநரிடம் விடுத்த வேண்டுகோளின்படி, கௌரவ மாகாண ஆளுநரின் இல.GOS/ADM/13-7766 2023.03.23 திகதிய கடிதம் மூலம் 2023.04.16 திகதி வரையும் மற்றும் இல.GOS/ADM/13-7923 மற்றும் 2023.04.20 திகதிய கடிதம் மூலம் 2023.05.15 திகதி வரையும், இல.GOS/ADM/13 மற்றும் 2023.06.12 திகதிய கடிதத்தின் மூலம் 2023.06.20 திகதி வரையும் முன்னாள் மாநகர முதல்வருக்கு உத்தியோகப்பூர்வ இல்லத்தில் தங்கியிருக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், உத்தியோகபூர்வ இல்லம் 2023.06.18 ஆம் திகதி முறையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 8,9,10,11)<br><br>மேலும், அவரது பதவிக்காலம் முடிவடைந்தவுடன் கௌரவ முன்னாள் மாநகர முதல்வரினால் பயன்படுத்தப்பட்ட கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான வாகனங்கள் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

பாலித நாநாயக்கார
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை
Palitha Nanayakkara
Municipal Commissioner
Colombo Municipal Council